DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 22.01.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.22/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.4 |
| Name | : | வெங்கடேஷ் |
| Father Name | : | வெங்கடராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 22.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**<u>விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(01.46.P.M):-</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், பெலகாட்டில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகின்றேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலும், பார்வை மகஜரிலுள்ள 1-வது கையொப்பம் என்னுடையது தான். சம்பவ இடத்திலிருந்து போலீசார் கட்டையை கைப்பற்றி காவல் நிலையத்திற்கு எடுத்து வந்தார்கள். **கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகஜரிலுள்ள 1-வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**(அரசுத் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டுஅனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

கடந்த 21.08.2024–ம் தேதி ஏற்காடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சம்பவ இடத்திலிருந்து கட்டை ஒன்றை கைப்பற்றியதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி தனக்கு தெரிந்தவர் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் எத்தனை கையெழுத்து செய்தேன் என்று தெரியாது என்றால் சரியல்ல, இரண்டு கையெழுத்து செய்தேன். எழுதிய தாளிலேயே கையெழுத்து போட்டேன். என்னை போலீசார் சம்பவ இடத்திற்கு அழைக்கவில்லை என்றால் சரிதான். மகஜரிலுள்ள விவரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினரா என்றால் ஆமாம்.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>**

1. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் 12–ம் வகுப்பு படித்துள்ளேன்.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.45.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.01.22 14:55:47 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.